முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

| 22 | T | I |
|---|---|---|

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

# First Term Test - Grade 10 - 2020

## தமிழ் மொழியும் இலக்கியமும் - I

பெயர்/சுட்டெண் : ................................ காலம் : 1 மணித்தியாலம்

**கவனிக்கவும்.**

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

✍ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

✍ **தடித்த எழுத்திலுள்ள சொல் பற்றிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(1) வண்டோ கானத்திடையிருந்து வந்து கமல**மது** உண்ணும். இங்கு **மது** என்பதன் ஒத்த சொல்,
1. பொய்கை 2. வண்டு 3. தேன் 4. தாமரை

(2) சிறு பழத்தொருவிதை தெண்ணீர் **கயத்துட்**.......... **கயம்** என்பதன் பொருள்,
1. கடல் 2. குளம் 3. நீர் 4. ஆல மரம்

(3) **வெகுளி** பொங்கிப் பகைவரை நிந்திப்பார், இங்கு **வெகுளி** என்பது,
1. கோபம் 2. பாசம் 3. அன்பு 4. கருணை

(4) "நாயனையார் **கேண்மை** தழீஇக் கொளல் வேண்டும்" **கேண்மை** என்பதன் எதிர்கருத்து,
1. கேட்காமை 2. நன்மை 3. தீமை 4. பகைமை

(5) "மானிடனாய்ப் பிறப்பது **அரிது**" என்றார் ஔவையார். **அரிது** என்பதன் எதிர்ச்சொல்,
1. எளிது 2. சிறிது 3. பெரிது 4. இனிது

✍ **பின்வரும் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(6) காடும் காடு சார்ந்த நிலமும்,
1. மருதம் 2. முல்லை 3. குறிஞ்சி 4. நெய்தல்

(7) புனல், சலம், அம்பு என பல பொருள் குறிக்கும் ஒரு சொல்,
1. தண்ணீர் 2. வெந்நீர் 3. குளம் 4. வேல்

(8) குண்டு, வடவை என்பது போல போத்து,
1. பிணை 2. பிணா 3. கலை 4. பெட்டை

(9) சுப்பர் மார்க்கட் (Super Market) என்பதன் தமிழ் வடிவம்,
1. நாளங்காடி 2. அங்காடி 3. அல்லங்காடி 4. சிறப்பங்காடி

(10) உற்சாகமூட்டல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்,
1. தட்டிப் பறித்தல் 2. தட்டிக் கொடுத்தல் 3. தட்டிப் பேசுதல் 4. தட்டிப் பார்த்தல்


kalvi.lk

(11) சொத்தை அனுபவிக்கும் உரிமையுடன் கூடிய அடைமானம்,
1. ஒற்றி 2. ஒப்புரவு 3. கப்பம் 4. ஆவணம்

(12) அரசன், குரு, பெரியோர், குழந்தைகள் ஆகியோரைக் காணச் செல்வோர் கொண்டு செல்லும் உபகாரப் பொருள்,
1. கைவில்லியம் 2. சங்கநிதி 3. கையுறை 4. கப்பம்

(13) அவன் ரொக்கம் ரொக்கமாக சீதனம் எடுத்து திருமணம் செய்தான். ரொக்கம் என்பது,
1. போர்த்துக்கேய மொழி 2. ஒல்லாந்து மொழி 3. கன்னட மொழி 4. பாரசீக மொழி

(14) பின்வருவனவற்றுள் இணைமொழி அல்லாதது,
1. பச்சைபசேல் 2. தோட்டந்துரவு 3. சூதுவாது 4. இன்னார் இனியார்

(15) தானும் அனுபவிக்காது பிறரையும் அனுபவிக்க விடாத செயற்பாட்டிற்குப் பொருத்தமான உவமைத்தொடர்,
1. மதில் மேல் பூனை போல
2. புதையல் காத்த பூதம் போல
3. குரங்கின் கை பூ மாலை போல
4. வைக்கோற்பட்டை நாய் போல

(16) குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் என்பதற்குப் பொருத்தமான இன்னொரு பழமொழி,
1. கழுதை அறியுமா கற்பூர வாசனை
2. நாய்க்கேன் போர்த் தேங்காய்
3. கிட்டாதாயின் வெட்டன மற
4. எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

(17) குறு குறு நடந்து சிறுகை நீட்டி.... இங்கு “குறு குறு” என்பது,
1. அடுக்குத் தொடர்
2. இணைமொழி
3. ஒலிக்குறிப்புச் சொல்
4. இரட்டைக் கிளவி

(18) பின்வருவனவற்றுள் கண்டான் என்பதன் பகுதியாக அமைந்த சொல்,
1. கண் 2. கண்டு 3. காண் 4. கண்டா

(19) விட்டுக் கொடுத்தான் என்பது,
1. கூட்டுவினை 2. தனிவினை 3. தெரிநிலைவினை 4. முதல் வினை

(20) கனவில் கண்ட பணம் செலவுக்கு உதவுமா? என்ற பழமொழிக்கு ஈடான இன்னொரு பழமொழி,
1. இரக்கப் போனாலும் சிறக்கப்போ
2. ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது
3. இட்டுக் கெட்டார் எவரும் இல்லை
4. கனிந்த பழம் தானே விழும்

✍ **பின்வருவனவற்றுள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

(21) “க்” என்ற சொல் உச்சரிப்பில் வேறுபடும் சொல்,
1. தங்கம் 2. பாகம் 3. மேகம் 4. தாகம்

(22) பெயராகவும், வினையாகவும் அமையக்கூடிய சொல்,
1. நடு 2. பாய் 3. தடை 4. இடை

(23) கருமேகம் என்பது,
1. வேற்றுமைத்தொகை
2. வினைத்தொகை
3. பண்புத்தொகை
4. உம்மைத்தொகை


kalvi.lk

(24) அரிசி மாவால் செய்த பிட்டு... இவ்வாக்கியத்தில் இடம்பெறும் வேற்றுமை,

1. முதலாம் வேற்றுமை
2. இரண்டாம் வேற்றுமை
3. மூன்றாம் வேற்றுமை
4. நான்காம் வேற்றுமை

(25) பின்வருவனவற்றுள் பல பொருள் உணர்த்தும் உரிச்சொல்,

1. சால 2. நனி 3. கடி 4. உறு

(26) பின்வருவனவற்றுள் எதிர்கால இடைநிலையாக அமைவது,

1. கின்று 2. வ், ப் 3. கிறு 4. இன், இல்

(27) பின்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடராக அமைவது,

1. விமலா பாடினாள் 2. பாடிய விமலா 3. விமலா வா 4. பாடினாள் விமலா

(28) வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்றையும் கொண்ட சொல்,

1. தாழ்வு 2. பழம் 3. தமிழ் 4. பண்பு

(29) நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன் கொடுக்கும். தொன்மையான இவ்வுலகில் நல்லார் ஒருவர் இருப்பாராயின் அவர் நிமித்தம் எல்லோருக்குமாக மழை பெய்யும்.

1. நல்லவர் ஒருவர் இருப்பதால் எல்லலோருக்கும் நன்மை விளையும்.
2. நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்கும் செல்லும்.
3. மழை எல்லோருக்கும் கிடைக்கின்றது.
4. நல்லார் இருக்கும் போது நாட்டில் மழை பெய்யும்.

(30) நெசவுத் தொழில் சிறந்த ஒரு தொழிலாகக் கருதப்படுகின்றது. "எவ்வுயிர்க்கும் தீங்கு பயிலாத தொழில் இதுவே. செய்யும் தொழில் எல்லாம் சீர் தூக்கிப் பார்க்கின் பின் நெய்யும் தொழிலுக்கு நிகராகா" எனத் திருக்குறளும் கூறுகின்றது.

1. நெசவுத் தொழில் தீங்கு அல்லாதது.
2. நெசவுத் தொழில் பற்றி வள்ளுவர் கூறியுள்ளார்.
3. நெசவுத் தொழிலின் இழிவு பற்றி வள்ளுவர் கூறியுள்ளார்.
4. நெசவுத் தொழிலின் சிறப்பு.

✍ **வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

(31) வேடனும் நாயும்,

1. சென்றனர் 2. சென்றன 3. செல்கின்றன 4. செல்லும்

(32) இடம்பெயர்வினால் வரும் அகதிகள்,

1. அதிகரித்துள்ளது 2. அதிகரித்துள்ளனர் 3. அதிகரிப்பீர்கள் 4. அதிகரித்தார்கள்

(33) என்னுடைய மாணவிகள்,

1. இதுகளல்ல 2. இவைகளல்ல 3. இவர்களல்லர் 4. இவர்கலல்ளர்

(34) இப்பிரதேசத்தில் வைத்தியர் குறைபாடு இன்றும்,

1. மோசமாகிவிட்டிருக்கும்
2. மோசமாகிவிடும்
3. மோசமானதாக உள்ளது
4. மோசமானதாக உள்ளன.

NWP EXAM Education கல்வி අධ්‍යාපන

✍ **புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(35) நெற் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் அரசாங்கம் விவசாயிகளுக்கு ............................. மானியம் வழங்கத் தீர்மானித்தது.

1. நிவாரணம் 2. மானியம் 3. நன்கொடை 4. குத்தகை

(36) அரசாங்க சேவையில் முகாமைத்துவ உதவியாளர்கள் ஆட்சேர்ப்பதற்கான தகவல்களை உள்ளடக்கி ........................ வெளியானது.

1. வர்த்தமானி 2. வர்த்தகமானி 3. பத்திரிகை 4. சுற்று நிரூபம்

(37) 1. 2019 ஆம் ஆண்டிற்கான ...................... நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

1. பாதீடு 2. பிரேரணை 3. உடன்படிக்கை 4. வெள்ளையறிக்கை

(38) சாதுபோல் நடித்து தீது புரியுமொருவனைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான இலக்கணத் தொடர்,

1. அண்டப் புரட்டன் 2. தொழுக்கள்ளன்
3. உருத்திராட்சப் பூனை 4. அரை மனிதன்

✍ **பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற சொற்தொகுதியைத் தெரிவு செய்க.**

(39) 1. அட்டவணை, சுற்றுழா, வஞ்சனை, தணிமை
2. அட்டவணை, சுற்றுலா, வஞ்சணை, தனிமை
3. அட்டவணை, சுற்றுலா, வஞ்சனை, தனிமை
4. அட்டவணை, சுற்றுளா, வஞ்சனை, தனிமை

(40) 1. சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நிறைவு பெற்றது.
2. சான்றிதல் வழங்கும் நிகழ்வு நிறைவு பெற்றது.
3. சான்றிதழ் வலங்கும் நிகழ்வு நிறைவு பெற்றது.
4. சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நிரைவு பெற்றது.


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

22 T II

முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

First Term Test - Grade 10 - 2020

தமிழ் மொழியும் இலக்கியமும் - II

பெயர்/சுட்டெண் : ................................ காலம் : 02 மணித்தியாலம்

**கவனிக்கவும்.**

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(1) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.**

1. "புனலருவி கழங் கெனமுத் தாடும்" இத்தொடரை சந்தி பிரித்து எழுதுக.
2. கணி, கனி இச்சொற்களின் கருத்துப் புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
3. பின்வரும் தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியங்களாக்குக.
   அ) மிகப் பழமையான மரபிலக்கணத்தைக் கொண்டது தமிழ் மொழி
   ஆ) தமிழ் மொழி கேட்பதற்கு மிகவும் இனிமையானது.
4. "ஏன் மோனேஇ நீ உன்ரை மச்சாளிடம் பேசிறாயில்லையாம்" எனும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
5. தொழின் முறைக் கடிதமொன்றின் முக்கிய அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
6. பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு மீண்டும் எழுதுக.
   ஒரு இடமும் போகயில்லை மச்சாள் சும்மா வெளியாலை போய் விளையாடப் போறன்
7. பின்வரும் சொற்களுள் ககரம் மாற்றொலியாக ஒலிக்கும் சொற்களை தெரிவு செய்து எழுதுக.
   (கட்டில், கடை, பங்கம், கடல், காகம், மேகம், தீங்கு)
8. பின்வரும் சொற்களின் எதிர்ப்பாற் சொற்களை எழுதுக.
   அ) மருத்துவன் ஆ) வீரன்
9. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலை என்பவற்றைக் குறிப்பிடுக.
   "எனக்கு வீட்டிலை வேலை கிடக்கு" என்று அழாக் குறையாகச் சொல்லி விட்டு எடுத்தேன் ஓட்டம் நான்
10. ராதிகாவும் கணவனும் துன்பக் கேணியில் நீந்தினார்கள்.
    அ) இதில் இடம்பெற்றுள்ள அணி எது?
    ஆ) அதனை விளக்குக. (2x10=20 புள்ளிகள்)

**(2) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) நாம் உண்ணும் உணவே எமது ஆராக்கியத்திற்கு அடிப்படையாகும். ஆனால் இன்றோ உணவுப் பழக்க வழக்கங்கள் தவறானவையாக காணப்படுகின்றன. அதனால் உடலின் ஆராக்கியமும் பாதிப்படைகின்றது. எனவே எமது உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றியமைக்க வேண்டிய முறைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு ஒரு **விளக்கக் கட்டுரை.**

ஆ) உலகில் நாம் கண் கண்ட தெய்வம் தாயாகும். எந்த ஒரு உயிரினமும் தாயில்லாமல் பிறக்க முடியாது. தாயின் அன்புக்கு நிகராக உலகில் அன்பு காட்டக்கூடிய ஜீவன் இல்லையெனலாம். ஆனால் தாய் என்ற உறவின் உன்னதத்தை நாம் உணர்வதில்லை. இவ்விடயங்களை உள்ளடக்கி சர்வதேச அன்னையர் தினத்தை முன்னிட்டு நீர் நிகழ்த்திய **உரை.**

இ) சேமிப்பு என்பது மனிதனுக்கு அவசியமானது. சேமிக்கப் பழகாதவன் எதிர்காலத்தில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக நேரிடும். எனவே எமக்கு கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதியைச் சேமிப்பது இன்றியமையாதது என்பதனை வலியுறுத்தி இருவருக்கிடையில் நடைபெறும் **உரையாடல்.**


kalvi.lk

ஈ) தனது படிப்பை முடித்து விட்ட கமல் வேலைத் தேடி அலைகிறான். தனது தகுதிக்குத்தக்க வேலை கிடையாது மனம் தளர்ந்த நிலையில் தன் விவசாயியான அப்பாவும் இறந்து விடுகிறார். தாயையையும் இழந்திருந்த கமல் தன் இரு தங்கைகளுக்கும் தம்பிக்கும் வாழ வழிகாட்ட வேண்டிய நிலையில் தத்தளிக்கிறான். இதன் பிறகு நடப்பவற்றை சுவை பட விளக்குமாறு கற்பனை **சிறுகதை** ஒன்றை எழுதுக. (25 புள்ளிகள்)

**(3) கீழ்க்காணும் உரைப் பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையுமாறு எழுதுக.**

நமது மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இருவகை வழக்குகளைக் கொண்டது. இவ்விரு வழக்குகளினதும் சிறப்பியல்புகள் தனித்துவமானவை. பேச்சு வழக்கில் அவரவர் பிரதேச மொழியை சுவையுணர்வோடும், ஈடுபாட்டோடும், நேயத்தோடும் ஒவ்வொருவரும் பயன்படுத்துவது இயல்பானது. இதன் காரணமாகவே அவ்வவ் பிரதேச மொழியை பேசுவேபோராராலேயே அதனதன் சிறப்புத் தன்மைகளைப் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியும். ஒரு பிரதேசத்தின் பேச்சு வழக்குடன் பரீட்சயப்படாத ஒருவரால் அவ்வழக்குக்கு உரித்துடையவர் விளங்கும் அளவுக்கு உணர்வு பூர்வமாக விளங்க முடியாத நிலைமையும் இருக்கலாம். இதற்குக் காரணம் பேச்சு மொழியானது வார்த்தைக்குப் புறத்தே அவ்வவ் பிரதேச, சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைக்கேற்ற கருத்தைக் கொண்டிருப்பதாகும்.

நடைமுறையில் நாம் பல்வேறு பிரதேசத்தவர்களுடன் கலந்துரையாடுகின்றோம். தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தொடர்பாடுகின்றோம். இந்நிலையில் பல்வேறுபட்ட பிரதேச வழக்குகள் பற்றியும் நுணுக்கமாக அறிந்திருப்பது அவசியமே. நாம் கலந்துரையாடிய விடயங்கள் பலவற்றையும் நாம் செவிமடுத்த விடயங்கள் பலவற்றையும் எழுதுகின்ற சந்தர்ப்பங்களும் அதிகம் உள்ளன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட பிரதேச பேச்சு வழக்குகள் பற்றி அறிந்திருப்பது பயன் தரும்.

(10 புள்ளிகள்)

**(4) பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

விஞ்ஞானி என்பவன் நுணுகி ஆராய்கிறவன். பொறியிலாளன் எனப்படுபவன் ஏற்கனவே இல்லாத ஒன்றைப் புதிதாகப் படைப்பவன். தொழில்நுட்பவியலாளன் கருத்துக்களையும், திட்டங்களையும் நடைமுறைப்படுத்துபவன், அத்துடன் சமூகம் தொடர்பான தனது பொறுப்புக்களையும், கடமைகளையும் உணர்ந்தவன். விஞ்ஞானக் கல்வி இம்மூன்று இயல்புகளையும் மாணவர்கள் பெறும் வகையில் திட்டமிடப்படல் வேண்டும் என்பது கல்வியலாளர்கள் கருத்து. போசாக்கின்மை, நோய், பிணி, எழுத்தறிவின்மை, வேலையின்மை, சமத்துவமின்மை என்பவற்றைப் படிப்படியாகக் குறைத்து, இறுதியாக இல்லாதொழிப்பது அபிவிருத்தி எனப்படும். இவ்வாறான முன்னேற்றத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான போராட்டம் வெற்றியடைய விஞ்ஞானக் கல்வி உதவ வேண்டும்.

1. தொழினுட்பவியலாளன் என்பவன் யார்? ..............................................................................
..........................................................................................................................................
2. அபிவிருத்தி எனப்படுவது யாது? ......................................................................................
..........................................................................................................................................
3. விஞ்ஞானக் கல்வி தொடர்பாக கல்வியலாளர் கருத்து யாது? ...................................................
..........................................................................................................................................
4. விஞ்ஞானிக்கும் பொறியியலாளனுக்கும் இடையிலான வேறுபாடு யாது? .......................................
..........................................................................................................................................
5. விஞ்ஞானக் கல்வி எதற்கு உதவ வேண்டும் என கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்? ................................
..........................................................................................................................................

(10 புள்ளிகள்)

(5) இன்றைய கால கட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுவதால் சமூகம் பல சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்கின்றது. இதனைக் கருத்திற் கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் 100 சொற்களில் **துண்டுப்பிரசுரம்** எழுதுக.

**அல்லது**

நீர் வாழும் பிரதேசத்தில் உள்ள பிரதான வீதி சேதமடைந்து வாகனப் போக்குவரத்து உகந்ததாக இல்லை. இதனால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், அலுவலர்கள் எனப் பலரும் பாதிப்படைகின்றனர். எனவே அவ்வீதியைப் புனரமைக்க உடன் நடவடிக்கைகள் எடுக்கும்படி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக. (15 புள்ளிகள்)


kalvi.lk

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

| 22 | T | III |
|---|---|---|

# முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2020

# First Term Test - Grade 10 - 2020

## தமிழ் மொழியும் இலக்கியமும் - III

பெயர்/சுட்டெண் : ................................ காலம் : 02 மணித்தியாலம்

**கவனிக்கவும்.**

* அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கும் விடை தருக.

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

**(1) சுருக்கமான விடை தருக.**

1. "கமல மது உண்ணும்"
   அ) கமலம் என்பதன் பொருளைத் தருக.
   ஆ) மது என்பது எதனைக் குறிக்கின்றது?

2. அ) வெற்றி வேட்கை என்ற நூலின் ஆசிரியர் யார்?
   ஆ) அப்பாடலில் குறிப்பிடப்படும் பிரதான கருத்து யாது?

3. "உப்பில்லாக் கஞ்சினையுண்ணு மறுசுவை போல்"
   இத்தொடரை சந்தி பிரித்து எழுதுக.

4. அ) முதுமொழி வெண்பாவின் ஆசிரியர் யார்?
   ஆ) முதுமொழி வெண்பா என பெயர் வரக் காரணம் யாது?

5. அ) நீதி நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.
   ஆ) அவை எந்த யாப்பில் எழுதப்பட்டுள்ளன?

6. அ) ஆறுமுக நாவலர் கூட்டத்திற்கு தலைமை வகிக்காததன் காரணம் யாது?
   ஆ) அக்கூட்டத்திற்கு கட்டுரை ஆசிரியர் இட்ட பெயர் என்ன?

7. அ) "பொன்னாகமும் நாகமும் நாண நடந்தார்"
   இதில் நாகம் என்பதன் இரு பொருளையும் எழுதுக.
   ஆ) இவ்வாறு நாண நடந்தவர் யார்?

8. "மணி நித்திலம் புன்னகை சுடர் வீசிட"
   அ) இப்பாடல் வரியில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
   ஆ) அவ்வணியை விளக்குக.

9. "புலங்களோடு கரணமும் ஆவியும்"
   அ) இங்கு குறிப்பிடப்படும் புலங்கள் எவை?
   ஆ) கரணங்கள் எவை?

10. "விதியை நோவார். தன் நண்பனைத் தூற்றுவார். வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பார்"
    அ) இங்கு குறிப்பிடப்படும் மனிதனின் இழிவான குணங்கள் இரண்டு தருக.
    ஆ) வெகுளி என்பதன் பொருள் யாது?

(2x10=20 புள்ளிகள்)

(2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும், உரைப் பகுதிகளையும் வாசித்து கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1. கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா னவக்களனும் - பாத்துண்ணுந்
தன்மையிலான ரயலிருப்பு மிம் மூன்று
நன்மை பயத்த லில

அ) இப்பாடல் பெரும் இலக்கியம் யாது? எழுதியவர் யார்?
ஆ) இப்பாடலில் இடம்பெறும் நீதிக் கருத்துக்களை எழுதுக.

2. யானை அனையார் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழிஇக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) இப்பாடலில் கூறப்படும் பிரதான கருத்து யாது?
ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள உவமையணி ஒன்றினை விளக்குக.

3. காத்திருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழகார்ந்து களித்திட
யாத்த தேருரு ளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மங்காங்கிழுப்
புற்றெனக் கோத்த சிந்தனையோடேகி
யதில் மகிழ் கொண்டு நாட்கள்
பல கழித்திட்டனன்
பூத்த கோதி வதனம் திரும்பு மேல்
புலனழிந்தொரு புத்துயி ரெய்து வேன்

அ) இப்பாடலில் பாரதி சிறுமி மீது கொண்ட காதல் எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது?
ஆ) இங்கு கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக.

4. விஸ்வநாதப்பிள்ளை மகா விவேகி, கணித மேதை, தாமோதரப் பிள்ளைக்கு ஆசிரியர். வாதம் செய்வதில் பெரிய சாமர்த்தியவான். நாவலர் அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மூத்தவர். நாவலர் அவர்களும், பிள்ளையும் இளமை தொடக்கம் பத்திரிகை வாயிலாக பல விடயங்களில் வாதம் செய்து வந்தவர்கள். நாவலர் அவர்களை எதிர்த்து நின்று பல கண்டனப் பத்திரிகைகளை பதித்து வெளியட்டவர். அவர் ஒரு முறை சிதம்பரத்தில் நாவலருடன் நேரில் வாதம் செய்து நாவலரின் கொள்கைகளுக்கு இணங்கி அவர்களிடம் மதிப்பு வைத்து அன்று தொடக்கம் நாவலரை குருவாக ஏற்றுக் கொண்டவர்.

அ) விஸ்வநாதப் பிள்ளையின் சிறப்புக்களை எழுதுக.
ஆ) ஆறுமுக நாவலருக்கும், விஸ்வநாதப் பிள்ளைக்கும் இடையில் உறவு எவ்வாறு காணப்பட்டது?

(4x5=20 புள்ளிகள்)

(3) நீதிப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு,
அ) வாக்குண்டாம் பாடலில் அடக்கமுடையாரின் சிறப்பு எவ்வாறு விளக்கப்பட்டுள்ளது?
ஆ) இனியவை நாற்பதில் இனிதான விடயங்களைப் பற்றி கூறும் சிறப்பினை எடுத்துக் காட்டுக.

(7+8=15 புள்ளிகள்)

(4) “நாவலர் எழுந்தார்” என்ற கட்டுரையில்,
அ) நாவலர் எழுந்த காட்சியையும், நடந்த விதத்தினையும் பற்றி கட்டுரை ஆசிரியர் எடுத்துக் காட்டும் விதத்தினை விளக்குக.
ஆ) அருணந்தி சிவாச்சாரியார் பற்றி கட்டுரை ஆசிரியர் கூறியிருப்பதற்கான காரணம் யாது?

(8+7=15 புள்ளிகள்)

(5) “பாரதியார் சுயசரிதையில்”
அ) நீர் எடுத்து வரும் சிறுமிக்காக பாரதியார் காத்திருந்த விதம் பற்றி எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?
ஆ) விரும்பும் எதனையும் எப்படிப்பட்டவர்களால் பெற முடியாது என பாரதியால் எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

(5+5=10 புள்ளிகள்)


kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**